முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் மானக்கஞ்சாற நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

03.01.2019, வியாழக்கிழமை

1. **ஓங்கார வடிவே அரங்கா**
**ஓங்கார ஒலியே அரசா**
**ஓங்கார குடிலை படைத்து**
**உலக உயிர் காக்கும் தேசிகா**

2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் ஒளி சூட்சும நூலை
ஆசிபட **விளம்பி சிலை திங்கள்**
**அறிவிக்க மூவாறோர் திகதி குருவாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 19ம் நாள் 03.01.2019, வியாழக்கிழமை)**

3. **வாரமதில் மானக்கஞ்சாற நாயனாரும்**
வழங்கிடுவேன் உலகோர் நலமுற
சோரமில்லா மக்கள் சக்தியை
சுத்தநெறி கொண்டு உருவாக்க

4. உருவாக்க வள்ளல் சக்தியாக
உயர்ஞானியாக அவதாரம் புரிந்த
குருவரங்கனே ஞானதேசிகனே
குவலயத்தில் உன் ஞானக்கொள்கை

5. கொள்கை பரவும் புவியெல்லாம்
குமரன் ஆறுமுகன் தலைமையை
ஆளுமையை கொண்ட தேசமாகி
அமைந்திடும் ஞான பூமியாக

6. ஆகவே உலக மக்களெல்லாம்
அரங்க ஞானியை நாடி நின்று
வகைபட தீட்சை உபதேசமுடன்
வல்லமை தரும் தருமத்தை ஏற்று

7. ஏற்றுத் தொடர்ந்து வருகவே
எல்லா மக்களையும் சுத்தநெறி
ஆற்றலாய் பற்றி பரவெளியில்
ஆறுமுகன் ஆளுமைக்கு உரிய

8. உரிய சூட்சுமம் யாவும் விளங்கி
உயர்குணம் சாத்வீக சித்தநெறி
பெரியவர்கள் துணைபட தேறி
பிசகில்லா ஞானவான்களாவர்

9. ஆவரே விரும்பி அரங்கஞானி
அகிலமெங்கும் தேடி வருகின்ற
புவனமாற்ற ஞானிகள் ஆகி
புண்ணிய வழியில் சிறந்திடுவர்

10. சிறந்த ஞானி அரங்கன் சேவை
சித்தர்கள் கூட்டம் ஏற்றருள
பரந்த நல் பேருலக மக்களே
பணிந்து வாரீர் அரங்கன் சபைக்கு

11. அரங்கன் சபை தேவசபை
ஆறுமுகன் தலைமை கண்ட சபை
வரங்கள் பெற வாரீர் வணங்கியே
வழுத்திவந்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் மானக்கஞ்சாற நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

ஓங்காரத்தின் முழுவடிவமே அரங்கமகா தேசிகனே, ஓங்காரநாதமாக விளங்கி நிற்கின்ற ஞானஅரசனே இவ்வுலகினை மாற்றி உலகப்பெருமாற்றம்தனை நிகழ்த்திடவே ஏழாம் படை வீடாக ஓங்காரக்குடிலினை படைத்திட்ட முருகப்பெருமானின் அவதாரமே ஓங்காரக்குடில் படைத்துமே உலக உயிர்களைக் காத்து ரட்சிக்கின்ற ஞானதேசிகனே அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மார்கழி மாதம் 19ம் நாள் 03.01.2019, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே மானக்கஞ்சாற நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் மானக்கஞ்சாற நாயனார்.

குற்றமற்ற குறைவில்லாத மக்கள் சக்தியை உலகினில் உருவாக்கிடவே சுத்தநெறிதனை உலகோர்க்கு உபதேசித்து சுத்தநெறி கொண்டு தூய மக்கள் சக்தியை உருவாக்கி உலகினை காத்திடவே முருகப்பெருமானின் அவதாரமாக வள்ளல் சக்தியாக உயர்ஞானியாக அவதரித்து உலகோர்க்கு சற்குருவாக உபதேசித்து நிற்கும் குரு அரங்கமகா தேசிகனே ஞானதேசிகனே இவ்வுலகினில் உமது கொள்கையே உண்மையான ஞானக் கொள்கையாகும். உமது ஞானக்கொள்கையை கடைப்பிடிக்கும் தேசமெல்லாம் முருகப்பெருமானின் ஆட்சியை உடைய தேசமாக மாறி எல்லா வளமும் நலமும் பெற்று ஞானபூமியாக ஆகிடுமப்பா.

ஆதலினாலே உலக மக்களெல்லாம் ஆறுமுக அரங்கமகா தேசிகனை பயபக்தியுடன் பணிந்து நாடிச் சென்று அரங்கனின் திருவடிகளிலே சரணடைந்து முறையோடு தீட்சை உபதேசங்களை அடைந்து சர்வவல்லமைகளை தந்தருளும் தருமங்களை ஏற்று தவறாமல் தொடர்ந்து செய்து வர வேண்டும்.

தொடர்ந்து அரங்கனைப் பின்பற்றி நடந்து தர்மங்களை செய்து வரவர, உலகினில் உள்ள அனைத்து மக்களையும் அரங்கனின் தூயநெறிக் கொள்கைகள் ஆற்றலுடன் பற்றி பரவெளியில் முருகப்பெருமானின் ஆட்சிக்கு உகந்த தேசமாக ஆகி, முருகப்பெருமானின் சூட்சுமங்கள் யாவும் மக்களுக்கு விளங்கி மக்களிடையே உயர்ந்த குணமும் சாத்வீகம்மிக்க சித்தர்களின் நெறியும் பெருகி பெரியவர்களான ஞானிகளின் துணைபட தேற்றம் அடைந்து பிசகில்லாத ஞானவான்களாக ஆகிடுவர். ஞானவான்களாக ஆகிய அவரெல்லாம் அரங்கன் விரும்புகின்ற வகையிலே ஞானத்தில் தேர்ச்சி பெற்று ஞானிகளாக ஆகிடுவார்கள், புண்ணிய வழியில் சென்று சிறப்பான வாழ்வினையும் வாழ்ந்து சிறப்படைவார்கள்.

இவ்வுலகின் மிகச்சிறந்த ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தொண்டுகள் தம்மை நவகோடி சித்தரிஷி கணங்களும் தமது தொண்டுகளாக ஏற்று செயல்படுத்தி அருள் செய்து வருகின்றனர். ஆதலினாலே இப்பரந்த புவியில் கலியுகத்தினில் வாழும் மக்களே உங்களது நிலையை உணர்ந்து பயபக்தி பணிவுடன் பணிந்து வாரீர் ஆறுமுகனின் ஞானசபையாம் ஏழாம் படை வீடாம் துறையூர் ஓங்காரக்குடிலிற்கு, அரங்கனின் சபை தேவர்களின் சபைக்கு ஒப்பானதாகும். முருகப்பெருமானின் தலைமையில் நடக்கும் சபை, ஆதலால் முருகப்பெருமானின் ஞானசபையும் இதுவேயாகும். அறுபடை வீட்டிற்கு மேலாய் கலியுகத்தினில் விளங்கி நிற்கும் ஏழாம் படை வீடும் இதுவேயாகும். ஆதலினால் உலகோரே வரங்களைப் பெற்று கடைத்தேறிட உடன் விரைந்து பணிந்து வணங்கி வாரீர் வாரீர் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஞானசபையாம் துறையூர் ஓங்காரக்குடிலிற்கு என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் மானக்கஞ்சாற நாயனார்.

–சுபம்–